Koviloor Digital Library

பகவான்

ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் அருளிய

26-2


# உபதேச வுந்தியார்

பொழிப்புரையுடன்

ஸம்ஸ்கிருத

உபதேசஸாரம்

ACC NO 37193



ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை – 606 603.

Koviloor Digital Library

Koviloor Digital Library

26-2

பகவான்

ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் அருளிய

# உபதேச வுந்தியார்

பொழிப்புரையுடன்

ஸம்ஸ்கிருத

உபதேசஸாரம்

SRI RAMANA SATSANGH,
"RAMANA"
C/44, HINDU COLONY
NANGANALLUR, MADRAS

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 3793

பதிப்பாளர் :

V.S. ரமணன்,

தலைவர், நிர்வாகக்குழு,

ஸ்ரீ ரமணாச்ரமம்

திருவண்ணாமலை - 606 603

1996

Koviloor Digital Library

© ஸ்ரீரமணாச்ரமம், திருவண்ணாமலை.

முதல் பதிப்பு : 1981
இரண்டாம் பதிப்பு : 1993
மூன்றாம் பதிப்பு : 1996


3,000 பிரதிகள்

விலை : ரூ.

Printed by offset at
**Nagarjun Printers**
2, 1st Street Dr. Radhakrishna Nagar, Madras - 600 021.

Koviloor Digital Library

26-2



BHAGAVAN SRI RAMANA MAHARSHI

Koviloor Digital Library

Koviloor Digital Library

# பதிப்புரை

பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளது அருள் வாக்கினுலேயே தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் அமைந்த இவ் 'வுபதேச வுந்தியா'ரும் 'உபதேச ஸார'மும். ஒருங்கே யோதி இன்புற விரும்பும் அன்பர்களின் பொருட்டு. அவை பகவானுல் அருளப் பெற்ற' வரிசைக்கிரமத்திலேயே (தமிழ் மூலமும் ஸம்ஸ்கிருத மொழிபெயர்ப்பும் ஆகிய வரிசையில்) இந்நூல் வடிவாக்கப்படுகிறது. மேலும், 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்' சாயுஜ்ய வீடடைவராதலின், பொருளுணர்ந்து சாதனையில் ஈடுபடும் உத்தமர்கட்கு உபயோகமாகும் பொருட்டு, ஸ்ரீ சாது ஓம் அவர்களால் எழுதப்பெற்ற தமிழ் மூலத்தின் பொழிப்புரையுடனும் பதிப்பிக்கப்படுகிறது.

தலைவர், நிர்வாகக் குழு

**ஸ்ரீரமணுச்ரமம்,**

**திருவண்ணுமலை.**

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ அருணசலரமணய

# நூன்முகம்

ஸ்ரீ முருகனுர் தாம் இயற்றிய 'ஸ்ரீ ரமண சந்நிதிமுறை' யென்ற நூலில், சிவபிரான் தாருக வனத் தவசிகளிடையே ஓர் பிக்ஷாண்டியாக எழுந்தருளிய காதைப் பகுதியை "உந்தியார்" செய்யுட்களாகப் பாடிவரும்போது, அத் தவசிகளுக்குச் சிவபிரான் அருளிய உபதேசங்களைத் தொகுத்துப் பாடியருளும்படி, சாக்ஷாத் ஸ்ரீ அருணசல சிவ பிராணுகவே தற்போது கண்முன் எழுந்தருளி விளங்கிக் கொண்டிருக்கும் தமது குருநாதனை பகவான் ஸ்ரீ ரமண மகர்ஷிகளை வேண்டினர். பகவான் அவ் வேண்டுகோட் கிணங்கி, 'உந்தியார்' பா வினத்திலேயே முப்பது தமிழ்ச் செய்யுட்களாக அருளிய சிவோபதேசமே "உபதேச வுந்தியார்" என்னும் இந் நூலாகும். மூல நூலாகிய இதனைப் பிறகு பகவானே ஸம்ஸ்கிருதத்திலும் அருளிச் செய்யவே, அவ் வழிவந்த நூலே "உபதேச ஸாரம்" எனப் பெயர் பெற்றது.

அரிய அத்துவித வேதாந்த சாஸ்திரமான இந்நூலில், முதலிரண்டு பாடல்களாற் காமிய கர்மங்களைக் கண்டித்த பின், 3ஆவது பாடலால் நிஷ்காமிய கர்மத்தை வலியுறுத்தி, 4இல் இருந்து 8ஆவது பாடல்வரை ஒன்றைவிட வொன் றுயர்ந்ததான நிஷ்காமிய பூஜை, ஜபம், தியானங்களைக் கிரமமாகப் போதித்து, 9ஆவது பாடலில் இச்சாதனைகளைச் செய்யக் கிளம்பிய முயற்சி ரூப மனமும் பாவனுதீதமாய் இதயத்தில் ஒடுங்கி நிற்கும் சமாதி நிஷ்டையே பரபக்தியின் தத்துவமாகும் எனப் புகட்டப்படுகிறது. கர்மம், பக்தி மார்க் கங்களாக இப்பாடல் வரையிலும் போதிக்கப் பெற்றவதனுல் எய்தப் பெறுகின்ற 'உதித்த விடத்தி லொடுங்கி' நிற்கும்

Koviloor Digital Library



இந்நிலையேதான் ராஜயோக, ஞானயோக முடிவுமாகும் என்ற உண்மையை 10ஆவது பாடலாற் கூறியபின் 11 முதல் 15ஆவது பாடல்வரை ராஜயோக நெறியை விளக்கித் தந்து, 16 முதல் முடிவு வரையுள்ள பாடல்களாற் சரியான ஞான யோக மார்க்கமாகிய ஆன்மவிசாரத்தைப் பகவான் உபதேசித்து முடிக்கின்றனர். இவ்வாறு இவ் வுபதேச வுந்தியார் சதுர்யோக சாஸ்திர சாரமாகி, பரம புருஷார்த்தத்தை நாடும் முமுக்ஷுக்களுக்கு அரிய ஞான நிதியாய் விளங்குவதாகும்.

சாது ஓம்.

---

Koviloor Digital Library

# உபதேச வுந்தியார்

## பாயிரம்

### வெண்பா

கன்மமயம் தீர்ந்துகதி காண நெறிமுறையின்
மன்மமுல குய்ய வழங்குகெனச்—சொன்முருகற்
கெந்தைரம ணன்றெருகுத் தீந்தா னுபதேச
வுந்தியார் ஞானவிளக் கோர்

பொழிப்புரை :—"இவ்வுலக மக்கள் கர்மங்களில் ஈடுபாடான மயக்கம் நீங்கி வீடடைந்து உய்யத் தக்க சாதனையின் இரகசியத்தை அருளுக" என்று வேண்டி நின்ற ரமண சற்சீடராகிய முருகனுருக்கு, நம் தந்தையாகிய பகவான் ஸ்ரீ ரமணர் தொகுத்தருளிய ஞான தீபமே இவ் வுபதேச வுந்தியார் என்றறிக.

### உபோற்காதம்

1. தாரு வனத்திற் றவஞ்செய் திருந்தவர்
பூருவ கன்மத்தா லுந்தீபற
போக்கரை பேர்யின ருந்தீபற.

### முன் வரலாறு

தாருக வனத்திலே தவம் செய்துகொண்டிருந்த தவசிகள் பழைய (காமிய) கர்ம வழிகளையே பின்பற்றியதால் வழி தவறிக் கேடுற்றனர். எவ்வாறெனின்,

Koviloor Digital Library



2. கன்மத்தை யன்றிக் கடவு ளிலையெனும்
வன்மத்த ராயின ருந்தீபற
வஞ்சச் செருக்கினு லுந்தீபற.........

தாம் செய்யும் கர்மங்களைத் தவிர பரமான கடவுள் வேறென்றுமே யில்லை என்னு மளவிற்கு வஞ்சச் செருக்கேறி வலிய அறியாமைக் குள்ளாயினர்.

இங்கு இடைப்பட்ட சரிதச் சுருக்கமாவது:—அதனுல் அவர்களை மோட்ச மார்க்கத்தில் உய்விக்கத் திருவுளங் கொண்டு சிவபிரான் ஓர் பிக்ஷாண்டியின் வேடந்தாங்கி தாருக வனத்துட் பிரவேசித்தார். மகாவிஷ்ணுவும் ஓர் அழகிய மோகினியின் வேடந்தாங்கி அவருடன் சென்ருர். மோகினியைப் பார்த்ததும், மெய்ப்பொருளின் உண்மை ஞானம்பெருதவரையில் எவ்வளவு தவஞ் செய்த விராகிகளை யும் கவிழ்க்கக் கூடியதான பெண்ணுசை அத் தவசிகளுக்கு உண்டாயிற்று. அதனுல் அவர்கள் தமது நித்திய கர்மானுஷ் டானங்களை மறந்து மோகினியைப் பின்ருெடர்ந்தனர். சிவபிரானுன பிக்ஷாண்டியின் தெய்வீக தேஜசைக் கண்டு அத் தவசிகளின் மனைவியர் அனைவரும் தன்வய மிழந்து அவரைப் பின்ருெடர்ந்தனர். இதனை யறிந்த தவசிகள் வெகுண்டு, தீநெறி வேள்விகளைச் செய்து அவற்றினின்றும் உண்டாகிய கொடிய புலி, யானை, அக்கினி, சூலம் ஆகியவை களை பிக்ஷாண்டியைக் கொல்லும்படி அவர்மேல் ஏவினர். ஈசுவரனுன அவர் அக்கொடிய விலங்குகளைக் கொன்றும், அவைகளின் தோலை ஆடையாக்கிக் கொண்டும், சூலம், அக்கினி போன்ற இதர கருவிகளைத் தமது கைகளில் ஏந்தி யும் நின்றனர். மிக்க வலிமையுள்ள கர்மங்களாம் அவ் வேள் விகளினின் றெழுந்த அவ் வாயுதங்களும் பிக்ஷாண்டியின் முன் பயனற் றழிந்ததை அத் தவசிகள் கண்டனர்.

3. கன்ம பலந்தருங் கர்த்தற் பழித்துச்செய்
கன்ம பலங்கண்டா ருந்தீபற
கர்வ மகன்றன ருந்தீபற.

Koviloor Digital Library



கர்மங்களுக்குப் பலனை யளிக்கும் கர்த்தாவாகிய கடவுளை நிராகரித்துச் செய்யும் கர்மங்கள் பயனற்றுப் போவதை (மேற்கூறியவாறு) நேரிற் கண்டதால் அத் தவசிகள் கர்வம் நீங்கி அடங்கினர்.

4. காத்தரு ளென்று கரையக் கருணைக்கண்
சேர்த்தருள் செய்தன னுந்தீபற
சிவனுப தேசமி துந்தீபற.

'காத்தருள்வீர்'' என்று அபயம் வேண்டிப் பணிந்து துதித்த அத் தவசிகளுக்குக் கருணைக் கடைக்கண் அளித்து சிவபிரான் கீழ்வரும் உபதேசத்தைச் செய்தார்.

5. உட்கொண் டொழுக வுபதேச சாரத்தை
யுட்கொண் டெழுஞ்சுக முந்தீபற
வுட்டுன் பொழிந்திடு முந்தீபற.

சிவபிரான் செய்த இவ்வுபதேசங்களின் சாரத்தைப் பின்பற்றி யொழுகினுல் உள்ளத் துயரம் யாவும் ஒழிந்து, ஆனந்தம் உள்ளத்திற் பெருகும்.

6. சார வுபதேச சாரமுட் சாரவே
சேரக் களிசேர வுந்தீபற
தீரத் துயர்தீர வுந்தீபற.

ஆதலால் இவ்வுபதேச சாரத்தின் பொருள் நம் உள்ளத்திற் சார்வ தாகுக; இன்பம் பெருகுவ தாக; துன்பந் தீர்வ தாகுக.

Koviloor Digital Library

## நூல்

**தமிழ் மூலம் :**

1. கன்மம் பயன்றரல் கர்த்தன தாணையாற்
கன்மங் கடவுளோ வுந்தீபற
கன்மஞ் சடமதா லுந்தீபற.

**ஸம்ஸ்கிருதம் :**

कर्तुराज्ञया प्राप्यते फलम् ।
कर्म किं परं कर्म तज्जडम् ।। १ ।।

தமிழ் மூலத்தின் பொழிப்புரை :— (ஜீவர்களது) கர்மங்கள் பலன்களைத் தருவது தலைவனுன கடவுளது ஆஜ்ஞைப் படியே யாகும். (ஏனெனில்) கர்மம் (சுய இயக்க மற்ற) ஜடம். ஆகையால் கர்மமே கடவுளாகிவிட முடியுமா? (முடியாது என்க.)

2. வினையின் விளைவு விளிவுற்று வித்தாய்
வினைக்கடல் வீழ்த்திடு முந்தீபற
வீடு தரலிலை யுந்தீபற.

कृतिमहोदधौ पतनकारणम् ।
फलमशाश्वतं गतिनिरोधकम् ।। २ ।।

(சுகதுக்க வடிவான நல்-தீ) வினைப் பயன்கள் (அனுப விப்பதால்) தீர்ந்து விடும். (ஆயினும் மீண்டுங் கர்மஞ் செய்யும் விருப்ப மாகிய வாசனை வடிவான) விதைகளாய் மிஞ்சி நின்று (மேன்மேலும்) வினைக் கடலிலேயே யழுத்துமே தவிர அக் கர்மம் எதுவும் மோக்ஷத்தைத் தராது.

Koviloor Digital Library



3. கருத்தனுக் காக்குநிட் காமிய கன்மங்
கருத்தைத் திருத்தியஃ துந்தீபற
கதிவழி காண்பிக்கு முந்தீபற.

ईश्वरार्पितं नेच्छया कृतम् ।
चित्तशोधकं मुक्तिसाधकम् ।। ३ ।।

(பலனில் இச்சையை விடுத்து, அதைக்) கடவுளுக்கென சமர்ப்பித்துச் செய்யப்படும் நிட்காமிய கர்மங்களான அவை, மன அழுக்கை நீக்கி, மோக்ஷமடைய (எது சரியான) வழி (என்பதை) உணர வைக்கும்.

4. திடமிது பூசை செபமுந் தியான
முடல்வாக் குளத்தொழி லுந்தீபற
வுயர்வாகு மொன்றிலொன் றுந்தீபற.

कायवाङ्मनः कार्यमुत्तमम् ।
पूजनं जपश्चिन्तनं क्रमात् ।। ४ ।।

உடல், வாக்கு, மனம் இவற்றால் (மேற்கூறியவாறு நிஷ்காமியமாக) இயற்றப்படும் பூஜை, ஜபம், தியானம் ஆகிய கர்மங்கள் (முறையே) ஒன்றைவிட ஒன்று சிறந்ததாகும். திடமான முடிவு இது.

5. எண்ணுரு யாவு மிறையுரு வாமென
வெண்ணி வழிபட லுந்தீபற
வீசனற் பூசனை யுந்தீபற.

जगत ईशधीयुक्तसेवनम् ।
अष्टमूर्तिभृद्देवपूजनम ।। ५ ।।

Koviloor Digital Library



(மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஜீவன் என விளங்கும்) அஷ்ட மூர்த்தங்களாகிய பிரபஞ்சம் முழுவதும் கடவுளின் வடிவமே எனக் கருதி வழிபடுவது நல்ல கடவுட் பூஜை யாகும்.

குறிப்பு:—எண் உரு= ''எண்ணத்தால் உருப்பெற்றுத் தோன்றுகின்ற'' எனவும் பொருள் கொள்வ துண்டு.

6. வழுத்தலில் வாக்குச்ச வாய்க்குட் செபத்தில்
விழுப்பமா மானத முந்தீபற
விளம்புந் தியானமி துந்தீபற.

उत्तमस्तवादुच्चमन्दतः ।
चित्तजं जपध्यानमुत्तमम् ॥ ६ ॥

இறைவனைத் துதி செய்வதினும் ஜபம் மேலானது. உரத்த குரலில் ஜபம் செய்வதினும் வாய்க்குள்ளேயே ஜபித்தல் மேலாம். மனத்தால் ஜபிப்பது அதனினும் மேலாகும்; இதுவே தியானம் எனப்படுவது மாம்.

7. விட்டுக் கருதலி னுறுநெய் வீழ்ச்சிபோல்
விட்டிடா துன்னலே யுந்தீபற
விசேடமா முன்னவே யுந்தீபற.

आज्यधारया स्रोतसा समम्
सरलचिन्तनं विरलतः परम् ॥ ७ ॥

(இதர வெண்ணங்கள் குறுக்கிடுவதால்) விட்டுவிட்டுச் செய்யப்படும் தியானத்தைவிட, ஆற்றோட்டம் போலவும், நெய்வீழ்ச்சி போலவும் இடைவிடாது (இறைவனைக்) கருது வதே தியானத்தில் விசேடமான தாகும்.

Koviloor Digital Library



8. அனியபா வத்தி னவனக மாகு
மனனிய பாவமே யுந்தீபற
வணைத்தினு முத்தம முந்தீபற.

भेदभावनात्सोऽहमित्यसौ ।
भावनाऽभिदा पावनी मता ॥ ८ ॥

(தியானிக்கப்படும் கடவுள்) தனக்கு வேருனவர் என்று பாவிப்பதிலும், அவரே (தன்னுள்) நான் (என்னும் தன்மையின் உண்மையாக விளங்குபவர்) என்று கொள்ளும் அன்னிய மற்ற பாவனையே (தியான பாவங்கள்) யாவற்றிலும் சிறந்த தாகும்.

9. பாவ பலத்தினுற் பாவனு தீதசற்
பாவத் திருத்தலே யுந்தீபற
பரபத்தி தத்துவ முந்தீபற.

भावशून्यसद्भावसुस्थितिः ।
भावनाबलाद्भक्तिरुत्तमा ॥ ९ ॥

(இப்படி) பாவித்துப் பழகிய திறத்தால் (இந் 'நான்' பாவிக்க வேண்டிய அவசிய மற்ற தன் இயல்பே என் றறிந்து பாவிக்கும் முயற்சியு மற்று) பாவனை கடந்த "இருக்கிறேன்" என்னும் இருப்பு மாத்திரமான நிலையில் ஊன்றி நிற்பதே பரபத்தியின் உண்மை யாகும்.

10. உதித்த விடத்தி லொடுங்கி யிருத்த
லதுகன்மம் பத்தியு முந்தீபற
வதுயோக ஞானமு முந்தீபற.

हृत्स्थले मनः स्वस्थता क्रिया ।
भक्तियोगबोधाश्च निश्चितम् ॥ १० ॥

Koviloor Digital Library



(நிஷ்காமியமாக பூஜை, ஜபம், தியானமாகிற கர்மங்களைச் செய்யக் கிளம்பிய மனம் மேற்கூறியவாறு பாவனுதீத நிலையால்) தான் உதித்த இடமாகிய இதயத்தில் (மீண்டும் எழாமல்) ஒடுங்கி நிலைபெறுவதே கர்ம யோகம், பத்தியோகம் ஆகிய இரண்டின் முடிவு மாகும். அதுவேதான் ராஜ யோக, ஞான யோகங்களின் உண்மையு மாம்.

11. வளியுள் ளடக்க வலைபடு புட்போ
லுளமு மொடுங்குறு முந்தீபற
வொடுக்க வுபாயமி துந்தீபற.

वायुरोधनाल्लीयते मनः ।
जालपक्षिवद्रोधसाधनम् ।। ११ ।।

(உதித்த இடத்தில் ஒடுங்கும் இம் முடிவு இராஜயோகத்தில் நிகழ்வ தெவ்வா றெனின் :—) பிராணனை (கும்பகத்தால்) உள்ளே அடக்குவதால், வலையில் அகப்படும் பறவையைப் போல மனமும் ஒடுக்க மடையும். இது (யோக முறையால்) மனத்தை ஒடுக்கும் உபாய மாகும்.

12. உளமு முயிரு முணர்வுஞ் செயலு
முளவாங் கிளையிரண் டுந்தீபற
வொன் றவற் றின்மூல முந்தீபற.

चित्तवायवश्चित्क्रियायुताः ।
शाखयोर्द्वयी शक्तिमूलका ।। १२ ।।

(பிராண ஒடுக்கத்தால் மனம் எவ்வாறு ஒடுங்குமெனில்:—) மனமும் பிராணனுமான இவை, முறையே நினைப்பும் செய்கையும் உள்ள இரண்டு கிளைக ளாகும். அவற்றின் பிறப்பிடமோ (அடிமரம் போன்று) ஒன்றே யாகும்.

Koviloor Digital Library



[அதாவது:—ஒரே (ஸ்விச்) பொத்தானுல் இயக்கமுற்று எரியும் இரண்டு மின்சார விளக்குகளில் ஏதேனும் ஒன்றை யணைக்க விரும்பி மின்சார மூலமாகிய பொத்தானை இயக்கினும் மற்றென்றும் அணைந்து விடுவதேபோல. பிராணன்-மனம் இவற்றுள் ஒன்றை வசப்படுத்தும் முயற்சியால் மற்றென்றும் வசப்படும் என உபதேசம்.]

13. இலயமு நாச மிரண்டா மொடுக்க
மிலயித் துளதெழு முந்தீபற
வெழா துரு மாய்ந்ததே லுந்தீபற.

लयविनाशने उभयरोधने ।
लयगतं पुनर्भवति नो मृतम् ।। १३ ।।

மனத்தின் ஒடுக்கமானது 'மனோலயம்' என்றும் 'மனோநாசம்' என்றும் இருவகைப்படும். லயப்பட்ட மனம் (மீண்டும் எப்பொழுதாவது) எழுந்துவிடும். மனவுரு நாசமடைந்து விட்டால் (பிறகு) எழாது.

14. ஒடுக்க வளியை யொடுங்கு முளத்தை
விடுக்கவே யோர்வழி யுந்தீபற
வீயு மதனுரு வுந்தீபற.

प्राणबन्धनाल्लीनमानसम् ।
एकचिन्तनान्नाशमेत्यदः ।। १४ ।।

பிராணனை யடக்குவதால் ஒடுங்கி நிற்கும் மனத்தை, தன்னை உணரும் (ஐக்கியமுறும்) வழியிற் செலுத்தவே அம் மனவுரு நாச மடையும்.

Koviloor Digital Library



15. மனவுரு மாயமெய்ம் மன்னுமா யோகி
தனக்கோர் செயலில்லை யுந்தீபற
தன்னியல் சார்ந்தன னுந்தீபற.

नष्टमानसोत्कृष्टयोगिनः ।
कृत्यमस्ति किं स्वस्थितिं यतः ॥ १५ ॥

(இவ்வாறு) மனவுரு நாசமாகி, மெய்ப்பொருளில் நிலை பெற்ற (அந்த) மஹா யோகிக்கு, மேலொன்றும் செயல் அவசிய மில்லை. (ஏனெனில்) அவன் இயல்பாம் (தன்) ஆன்ம நிலையைச் சேர்ந்து விட்டான்.

16. வெளிவிட யங்களை விட்டு மனந்தன்
ஞெளியுரு வோர்தலே யுந்தீபற
வுண்மை யுணர்ச்சியா முந்தீபற.

दृश्यवारितं चित्तमात्मनः ।
चित्त्वदर्शनं तत्त्वदर्शनम् ॥ १६ ॥

(உதித்த இடத்தில் ஒடுங்குவதே இனி ஞான யோக முடிவுமாவது எவ்வாறெனின்:—) மனம் (ஐம்பொறிகளின் வழியே) பிரபஞ்ச வெளி விஷயங்களை அறிவதை விட்டுவிட்டு (அவற்றை அறியத் தனக்கு ஒளி எங்கிருந்து வருகிறதோ அந்த) தன் ஆன்ம அறிவொளியின் உருவை யுணர்வதே உண்மையான ஞானமாகும்.

17. மனத்தி னுருவை மறவா துசாவ
மனமென வொன்றிலை யுந்தீபற
மார்க்கநே ரார்க்குமி துந்தீபற.

मानसं तु किं मार्गणे कृते ।
नैव मानसं मार्ग आर्जवात् ॥ १७ ॥

Koviloor Digital Library



(மேற் கூறியவாறு மனம் தன் ஒளி மூலத்தை நோக்குவது எப்படி யெனின் :—பிரமாதம், நித்திரை இவற்ருல் முயற்சியில்) சோர்வுபடாமல் (அறிவொளியானஇம்) மனத்தின் உருவத்தை 'எது ?' என்று விசாரித்தால், மனம் என்று (தனியாக) ஒன்றுமே யில்லை 'என்பது தெரியவரும்). இது எவர்க்கும் நேரான (முக்தி) வழி யாகும்.

18. எண்ணங்க ளேமனம் யாவினு நானெனு
மெண்ணமே மூலமா முந்தீபற
யானு மனமென லுந்தீபற.

वृत्तयस्त्वहं वृत्तिमाश्रिताः ।
वृत्तयो मनो विद्ध्यहं मनः ।। १८ ।।

(பின், மனம் எனப்படுவதுதான் என்ன? எனில்:—) எண்ணங்களின் தொகுதியே மனம். இவ் வெண்ணங்கள் எல்லாவற்றினும் "நான்(இத்தேகம்)" என்னும் எண்ணமே முதல் எண்ண மாகும். ஆகவே மனம் எனப்படுவது "நான் (தேகம்)" என்னும் இவ் வெண்ணமே

19. நானென் றெழுமிட மேதென நாடவுண்
ணான் றலை சாய்ந்திடு முந்தீபற
ஞான விசாரமி துந்தீபற.

अहमयं कुतो भवति चिन्वतः ।
अयि पतत्यहं निजविचारणम् ।। १९ ।।

'நான்' என்று (இவ்வெண்ணம்) உற்பத்தியாகும் இடம் எதுவென்று தன்னுள்ளே தேடுவதால் 'நான்" (என்னும் இவ்வெண்ணம்) கிளம்பாமல் அழியும். இதுவே ஞான விசார (மார்க்க) மாகும்.

Koviloor Digital Library



20. நானென்று தானத்து நானுனென் றென்றது
தானாகத் தோன்றுமே யுந்தீபற
தானது பூன்றமா முந்தீபற.

अहमि नाशभाज्यहमहंतया ।
स्फुरति हृत्स्वयं परमपूर्णसत् ॥ २० ॥

'நான்' (என்னும் இவ்வகந்தை யெண்ணம் இரண்டற) ஒடுங்கும் அவ்விடத்தில் ('நான் இது—நான் அது' என்ற தற்சுட்டும் இல்லாமல்) ''நான் நானே'' என்ற (போதமாக) ஓர் (இருப்பு) உணர்வு தாமாகவே (விளங்கிக் கொண்டிருப்பது) தோன்றும். அதுதான் பரிபூரண வஸ்து.

21. நானெனுஞ் சொற்பொரு ளாமது நாளுமே
நானற்ற தூக்கத்து முந்தீபற
நமதின்மை நீக்கத்தா லுந்தீபற.

इदमहंपदाऽभिख्यमन्वहम् ।
अहमिलीनकेऽप्यलयसत्तया ॥ २१ ॥

நான் (என்ற அகந்தை யுணர்வு) ஒடுங்கிய தூக்கத்திலுங்கூட ''நாம் இல்லாமற் போனேம்'' என்பது இல்லாததால் (அதாவது, நாம் இருந்துகொண்டே யிருப்பதால்), 'நான்' என்னும் சொல்லுக்கு முக்காலத்திலும், மூவவஸ்தையிலும் (உண்மையான) பொருள் அந்தப் பரிபூரண வஸ்துவே.

22. உடல்பொறி யுள்ள முயிரிரு ளெல்லாஞ்
சடமசத் தானதா லுந்தீபற
சத்தான நானல்ல வுந்தீபற.

विग्रहेन्द्रियप्राणधीतमः ।
नाहमेकसत्तज्जडं ह्यसत् ॥ २२ ॥

Koviloor Digital Library



தூலவுடல் (அன்னமய கோசம்), மனம் (மனோமய கோசம்), புத்தி (விஞ்ஞானமய கோசம்), பிராணன் (பிராண மய கோசம்), (இவை நான்கும் ஒடுங்குங்கால் அனுபவ மாகும்) இருள் (ஆனந்தமய கோசம்) ஆகிய பஞ்ச கோசங் களும் சுய அறிவோ, சுய இருப்போ அற்றவை யாகையால் அவை உண்மையிருப்பான (சந் மாத்திர) 'நான்' (ஆன்மா) ஆகா.

23. உள்ள துணர வுணர்வுவே றின்மையி
னுள்ள துணர்வாகு முந்தீபற.
வுணர்வேநா மாயுள முந்தீபற.

सत्त्वभासिका चित्क्ववेतरा ।
सत्तया हि चिच्चित्तया ह्यहम् ।। २३ ।।

இருப்பதாகிய அவ் வஸ்துவை உணர்வதற்கு (அதற்கு வேருக அங்கு) வேறொரு அறிவு இல்லாததால், அந்த ஸத் வஸ்துவே (தன்னை விளக்கும்) அறிவும் (சித்தும்) ஆகும். அந்த அறிவே (சித்தே) நாமாக (ஸத்தாக) இருக்கிறோம்.

24. இருக்கு மியற்கையா லீசசீ வர்க
ளொருபொரு ளேயாவ ருந்தீபற
வுபாதி யுணர்வேவே றுந்தீபற.

ईशजीवयोर्वेषधीभिदा ।
सत्स्वभावतो वस्तु केवलम् ।। २४ ।।

(மேற்கூறியபடி) ஸத் சித்தாக உள்ள இயல்பு நிலையில் ஈசனும் ஜீவர்களும் ஒரு வஸ்துவே யாவர். ஆனல் (''ஜீவன் கிஞ்சித்ஜ்ஞன், ஈசன் சர்வஜ்ஞன்—ஜீவன் அசக்தன், ஈசன் சர்வசக்தன் – ஜீவன் அற்பன், ஈசன் விராட்'' என்றவாறு

Koviloor Digital Library



ஸத்சித்தான பொது வுணர்வோடு ஜீவனுல் கற்பிக்கப்பட்ட) உபாதி யுணர்வு மட்டுமே இருவருக்கும் உள்ள வேற்றுமை யாகும்.

குறிப்பு :—உபாதியுணர்வு ஜீவ திருஷ்டியில் மட்டுமே தவிர இறைவனது திருஷ்டியில் அல்ல என்ற உண்மை இங்கு கருத்திற் கொள்ளத் தக்கது.

25. தன்னை யுபாதிவிட் டோர்வது தானீசன்
றன்னை யுணர்வதா முந்தீபற
தானு யொளிர்வதா லுந்தீபற.

वेषहानतः स्वात्मदर्शनम् ।
ईशदर्शनं स्वात्मरूपतः ।। २५ ।।

நமது உண்மை யியல்பாகவே கடவுள் விளங்கிக் கொண்டிருப்பதால், தன் உண்மையை (மேற்கூறிய) உபாதிகளை நீக்கிவிட்டு உணர்ந்து கொள்வதுதான் கடவுளை அறிவ தாகும்.

26. தானு யிருத்தலே தன்னை யறிதலாந்
தானிரண் டற்றதா லுந்தீபற
தன்மய நிட்டையீ துந்தீபற.

आत्मसंस्थितिः स्वात्मदर्शनम् ।
आत्मनिर्द्वयादात्मनिष्ठता ।। २६ ।।

தான் என்பது (இருப்பவன். இருப்பை அறிபவன் என்று) இரு பொருள்க ளல்ல வாதலால், தானுக (ஆன்மாவாக) இருப்பதே தன்னை யறிவது மாகும். இதுவே தன்மய (ப்ரஹ்ம) நிஷ்டை யாகும். ('தன்னை யுணர்தல்' என்று 25ஆவது உபதேசத்திற் கூறியதால், தன் இருப்புக்கும் உணர்வுக்கும் பேதங் கற்பிக்கக்கூடாது என்பது கருத்து).

Koviloor Digital Library



27. அறிவறி யாமையு மற்ற வறிவே
யறிவாகு முண்மையீ துந்தீபற
வறிவதற் கொன்றில யுந்தீபற.

ज्ञानवर्जिताऽज्ञानहीनचित् ।
ज्ञानमस्ति किं ज्ञातुमन्तरम् ॥ २७ ॥

"(ஒன்றை) அறிகிறேன், (ஒன்றை) அறியவில்லை" என்ற (இருமை) உணர்வே இல்லாத "இருக்கிறேன்" என்ற சந் மாத்திர உணர்வே ப்ரஹ்ம ஞானமாகும். இதுவே உண்மை. (ஏனெனில், அவ்வநுபூதி நிலையில் தான்) அறிவதற்கு (தனக்கு அயலாக) ஒன்றுமே யில்லை.

28. தனுதியில் யாதெனத் தான்றெரி கிற்பி
னனாதி யனந்தசத் துந்தீபற
வகண்ட சிதானந்த முந்தீபற.

किं स्वरूपमित्यात्मदर्शने ।
अव्ययाऽभवाऽऽपूर्णचित्सुखम् ॥ २८ ॥

தனது இயல்பு நிலை எதுவென்று தெரிந்துகொண்டால், பிறகு (விளங்குவது) தொடக்கமற்ற, முடிவற்ற, இடைவிடாத, சச்சிதானந்தமே (ப்ரஹ்மமே)யாம்.

29. பந்தவீ டற்ற பரசுக முற்றவா
றிந்த நிலைநிற்ற லுந்தீபற
விறைபணி நிற்றலா முந்தீபற.

बन्धमुक्त्यतीतं परं सुखम् ।
विन्दतीह जीवस्तु दैविकः ॥ २९ ॥

பந்தமுறல், முத்தி பெறல் (என்ற இருமை) இல்லாமல் (மேற்கூறிய) பரமானந்தப் பேறுற்று, இந்நிலையில் (நழுவாது)

Koviloor Digital Library



நிற்பதே இறைவன் பணித்தபடி ஒழுகுதலாம். (உண்மை யான கடவுட் கைங்கர்யமும் இதுவே.)

30. யானற் றியல்வது தேரி னெதுவது
தானற் றவமென்று னுந்தீபற
தானும் ரமணேச னுந்தீபற.

अहमपेतकं निजविभानकम् ।
महदिदं तपो रमणवागियम् ॥ ३० ॥

"நான் (என்ற அகந்தை) அழிந்து, (எப்போதும்) இயல்பாயுள்ள ஆன்மாவைத் தெரிந்துகொள்வது எதுவோ, அது தான் சிரேஷ்டமான தவம்" என்று அருள்கின்றார் பரமாத்ம சொரூபமாய் விளங்கும் பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகள்.

ஓம் தத் ஸத்

Koviloor Digital Library

## வாழ்த்து

1. இருடிக ளெல்லா மிறைவ னடியை
வருடி வணங்கின ருந்தீபற
வாழ்த்து முழங்கின ருந்தீபற.

(இவ்வரிய வுபதேசங்களைப் பெற்ற) அத் தாருக வனத்து ரிஷிகள் அனைவரும் இறைவனாகிய சிவபிரானது திருவடிகளைத் தொட்டு வணங்கி வாழ்த்துவா ராயினர்.

2. உற்றார்க் குறுதி யுபதேச வுந்தியார்
சொற்ற குருபர னுந்தீபற
சுமங்கள வேங்கட னுந்தீபற.

தம்மைப் புகலாக வந்தடைந்த அன்பர்களின் உய்வுக்கு உறுதிதரும் இவ்வுபதேச வுந்தியாரை அருளியவர் சிவகுருபரனான ஸ்ரீ ரமண பகவானவர்.

3. பல்லாண்டு பல்லாண்டு பற்பன்னூ ருயிரம்
பல்லாண்டு பல்லாண்டு முந்தீபற
பார்மிசை வாழ்கவே யுந்தீபற.

அந்த சற்குரு ரமண பகவான் இப்புவிமேல் பல்லாண்டு வாழ்க.

4. இசையெடுப் போருஞ் செவிமடுப் போரும்
வசையறத் தேர்வோரு முந்தீபற
வாழி பலவூழி யுந்தீபற.

இவ்வுபதேச வுந்தியாரை இசையோடு ஓதுவோரும், கேட்போரும், பிழையற உணர்வோரும் பல்லூழி வாழ்க.

Koviloor Digital Library



5. கற்கு மவர்களுங் கற்றுணர்ந் தாங்குத்தா
நிற்கு மவர்களு முந்தீபற
நீடூழி வாழியே யுந்தீபற.

இவ்வுபதேச வுந்தியாரைக் கற்போரும், கற்று, உணர்ந்து, அதன்படி நின்றெழுகுவோரும் நீடூழி வாழ்க.

உபதேச வுந்தியார்

முற்றிற்று.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 37/93

Koviloor Digital Library

Koviloor Digital Library

ॐ

नमो भगवते श्रीरमणाय